16.02.2026 O.S. 571/2021 வா.சா 1 ராதாகிருஷ்ணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் எம்.காம்.பி.எச்.டி வரை படித்துள்ளேன். நான் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து ஒய்வு பெற்று விட்டேன். என் சொந்த குடியிருப்பு திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகா விக்கிரமசிங்கபுரம் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த போதும் மேற்கண்ட முகவரியில் தான் வசித்து வந்தேன். வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் மாவட்டம் தவறாக உள்ளது என்றால் சரிதான். நான் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணத்திற்கு முன்பும், பின்பும் வழக்கு சொத்தின் விபரங்கள் தெரியும் என்றால் தெரியும். வழக்கு சொத்து என் அப்பா அமிர்தநாயகம்பிள்ளை கடந்த 1968ம் ஆண்டு ஆவண பதிவு எண்.3011ன் மூலம் கிடைத்தது என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ஆவணத்தில் மேலகரம் கிராமம் விருதலைபுரம் கதவு எண்.85 ல் உள்ள வீடு வகையறா நான்குஎல்கை குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு எல்கை கிழமேல் தெருவிற்கும் தெற்கு, நி.மாடசாமியா பிள்ளை வீடு பொதுசுவருக்கும் மேற்கு, கிழமேல் தெருவிற்கும் வடக்கு, சிவனுசெட்டியார் மனை பொதுசுவருக்கும் கிழக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அளவுகள் கிழமேல் தச்சுமுழம் 8, தென்வடல் தச்சுமுழம் 27 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழமேல் தச்சுமுழம் 8, தென்வடல் தச்சுமுழம் 27 என்ற அளவில் மட்டுமே என் அப்பா பெயரில் பதிவுகள் உள்ளது என்றும்,

கூடுதலான பரப்பு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த அளவுகளில் பிரச்சனை உள்ளது. எல்கைபடி 5-3/4 செண்டு உள்ளது. வா.சா.ஆ 4 ன்படி 3-3/4 செண்டு மட்டுமே உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ஆவணத்தின் அடிப்படையில் தான் உயில் வா.சா.ஆ 3 ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணத்தில் என் அப்பா ஏற்கனவே ஒரு உயில் 15/1993 ன்படி ஏற்படுத்தப்பட்டு அதன் பின்னர் வா.சா.ஆ 3 ன் படி ரத்து செய்யப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15/1993 உயில் ஆனது 29.03.1993 ல் தான் என் தந்தையார் முதல் உயிலை ஏற்படுத்தினார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது என் அப்பா கடந்த 29.03.1993 தேதியில் எழுதி வைத்த உயில் என்றால் சரிதான். அந்த 29.03.1993 தேதியிட்ட உயிலின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 1. பி.வா.சா.ஆ 1 ஆவணமானது எனது அப்பாவும், எனது அம்மாவும் சேர்ந்து எழுதி வைத்தது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 உயிலின்படி எனக்கும், எனது சகோதரர்களுக்கும் சேர்த்து எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உயிலில் வழக்கு சொத்து எனக்கு எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த உயிலில் வழக்கு சொத்தானது எனது சகோதரர் ராமகிருஷ்ணனுக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் கதவு எண் 85 ஆக இருந்து பின்னர் 24 ஆக மாற்றப்பட்டு அந்த சொத்தும், வழக்கு சொத்தும் சேர்த்து ராமகிருஷ்ணனுக்கு உயிலில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தும், பி.வா.சா.ஆ 1 ல் சொல்லப்பட்டுள்ள மனை வீடும் வடக்கும், தெற்குமாக அடுத்தடுத்து உள்ளது என்றால் வடக்கும், தெற்குமாக அமைந்துள்ளது. அந்த சொத்தானது ஒரே புல எண்ணில் அமைந்துள்ளது என்றால் சரிதான். கதவு எண். 24 மற்றும் வழக்கு

சொத்துக்கு எல்கை கிழமேல் தெருவிற்கும் தெற்கு, மாடசாமியாபிள்ளை மனை வீடு பொதுசுவருக்கும் மேற்கு, கிழமேல் தெருவிற்கும் வடக்கு, சிவனுசெட்டியார் மனை பொது வீட்டிற்கும் கிழக்கே என எல்கை சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழமேல் அடி 22, தென்வடல் அடி 74-1/4 உள்ள தெற்கு பார்த்த மட்டப்பா வீடு, கிழக்கு பார்த்த ஒட்டு சாய்ப்பு வீடுகள் இரண்டும் என வகையறாக்கள் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பா கிரையம் என்ன வாங்கும்போது என்ன எல்கை இருந்ததோ அதே எல்கை கொண்டு தான் எழுதப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு வீட்டின் முன்புறம் புழக்கத்திற்காக உள்ள இடம் அரசுக்கான இடமாகவோ, அல்லது அந்த சொத்து உரிமையாளர் இடமாகவோ இருக்கலாம் என்றால் இருக்கலாம். என் அப்பா கிரையம் வாங்கும் போது புழக்கத்திற்காக முன்பு இடம் இருந்தது என்றால் இல்லை. ஒட்டியே இரண்டு வீடுகள் இருந்தது. மட்டப்பா வீட்டிற்கு தென்புறம் படிகட்டுகள் இருந்தது. பி.வா.சா.ஆ 1ல் கண்ட சொத்தும் அளவுகள் சரியானது என்றும், அதன் அடிப்படையில் தான் சொத்துக்கள் அளவுகள் உள்ளது என்றும் அந்த சொத்துக்கள் மட்டும்தான் எனக்கு உள்ளது என்றால் சரியல்ல. அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் வா.சா.ஆ 3 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வா.சா.ஆ 3 ஆவணமானது என்றால் சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 உயில் எனது வசதிக்கேற்ப எல்கை மால்கள் உருவாக்கப்பட்டு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. 1993ல் எனது பெற்றோர்கள் எழுதியுள்ளார்கள். எங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. எனது பெற்றோர்கள் எழுதி வைத்தது எனக்கு தெரியாது என கூறுவது

வழக்கிற்காக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ஒரு உயிலானது பூர்வக சொத்திற்காவோ, அல்லது கிரைய சொத்திற்காகவோ ஏற்படுத்தப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணம் வா.சா.ஆ 4 ன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணமானது எங்களது உரிமையை காட்டக்கூடிய ஆவணமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 ஆவணமானது எனது மூத்தசகோதரர் ராமகிருஷ்ணன் பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணம் 20.082008 ல் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 என் மனைவிக்கு என்னால் எழுதி வைக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணத்தில் ராமகிருஷ்ணன் வீட்டு மனைக்கு தெற்கு என ஏற்கனவே பிரதிவாதிகள் 8 ஆண்டுகளுக்கு முன்பே கிரையம் செய்து அனுபவம் செய்து வருவதை காட்டாமல் எனது சகோதரர் எல்கையை காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அதே எல்கை சொல்லி தான் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 5 பொது அதிகார ஆவணத்திலும் அதே எல்கை தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அரசு புறம்போக்கு நிலத்தினை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உண்மை சங்கதிகளை மறைத்து பிரதிவாதிகளை பெயர்களை மறைத்து வேண்டுமென்றே என் சகோதரர் பெயரை நான்கு எல்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. உயிலை பார்த்து எழுதப்பட்டதால் அவ்வாறு நான்கு எல்கைகள் சொல்லப்பட்டுள்ளது. பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணத்தில் எனது பெயர் குறிப்பிட்டு எல்கை குறிப்பிடப்பட்டுள்ளது என்ற ஒரே காரணத்திற்காக எனக்கு உரிமை ஏற்பட்டுள்ளதாக கூறுவது

சரியல்ல என்றால் சரியல்ல. உரிமையை பொறுத்து ஆவணங்களில் பதிவுகள் இருந்தால் மட்டுமே ஏற்படும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் புல எண்.763/49 என வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புல எண்.763/49 என்பது நிர்வாக காரணங்களுக்காக அரசால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அந்த ஆவணம் பதிவு செய்யும் போது அதே புல எண் தான் இருந்தது. என் மனைவிக்கு நான் எழுதிகொடுத்த ஏற்பாடு ஆவணத்தில் பழைய புல எண்.185,186 என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ பதிவேட்டில் புல எண்.185, 186 என்பது அரசு புறம்போக்கு என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே அனைத்து சொத்துக்களும் அரசு புறம்போக்கில் தான் இருந்தது. அந்த புலஎண்.185, 186 க்குரிய அ பதிவேடு சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதில் அரசு புறம்போக்கு என உள்ளது என்றால் சரிதான். அந்த அ பதிவேடு பி.வா.சா.ஆ 2 ஆகும். வா.சா.ஆ 1, 5 ஆவணங்கள் சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள 37,38 வீடுகள் 2008 ம் ஆண்டிலேயே மேலகரம் பேரூராட்சியில் வரி விதிப்பு கேட்பு பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். மழையின் காரணமாக வீடு இடிந்து விட்டதால் அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டு விட்டது. சுற்றுசுவர் மட்டுமே உள்ளது. வழக்குரை மற்றும் முதல்விசாரணை வாக்குமூலத்தில் 1 ம் பிரதிவாதியின் உறவினர் மேலகரம் பேரூாட்சியில் அதிகாரியாக இருந்ததால் அவருக்கு ஆதரவாக செயல்பட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. வழக்கு 2 ம் தபசில் சொத்து என்ன என்பது தெரியுமா என்றால் என்னுடைய கதவு

எண். 37,38 க்குரியதாகும். 1ம் வழக்கு சொத்து ராமகிருஷ்ணனுக்குரிய 24ம் நம்பர் வீடாகும். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள 3 அட்டவணை சொத்துக்களை நான் வழக்குரையை பார்த்து தான் சொல்ல முடியும். எனக்கு சொந்தமான 2 அடி இடத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானம் கட்டியிருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அது உண்மை தான். அதனை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரட்கள் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. என் இடத்தை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக குறுக்கே ஒரு செங்கல் சுவர் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்தை பராமரிப்பது சம்பந்தமாக காவல்நிலையத்தில் என்னை அழைத்தார்கள் என்றால் சரிதான். நான் காவல்நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். செல்ல போகிறேன். பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 கிரைய பத்திரத்தில் கண்டுள்ளவாறு அடிதள சுவரை அவ்வாறே வைத்து கொண்டு மேல்சுவரை வைத்து மட்டுமே வைத்து வீடு கட்டி கொண்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்தது சம்பந்தமாக காவல்துறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். 2016ம் ஆண்டு அந்த புகாரை கொடுத்துள்ளேன். அந்த புகாரின் கைநலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளை பற்றி கூறியுள்ள தவறான கருத்துக்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. தடுப்பு சுவர் கட்டுவதற்கு நான் பேரூராட்சியில் அனுமதி வாங்கவில்லை என்றால் சரிதான். நான் அனுமதி கேட்டால் பிரதிவாதிகளின் உறவினரான மைத்துனர் அனுமதி வழங்கமாட்டார். நான் மனு கொடுத்த பிறகும் எனக்கு அனுமதி

வழங்கவில்லை. அவ்வாறு அனுமதி வழங்கவில்லை என ஏதேனும் எழுத்துபூர்வமாக எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றும், மனு கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு மனு கொடுத்திருந்தால் நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 2016 ம் ஆண்டு முதல் பிரதிவாதிகள் அத்துமீறல் செய்துள்ளதாக கூறியுள்ள நிலையில் எத்தனை முறை செய்தார்கள் என்றால் 2 முறை செய்தார்கள். அதற்கு தனியாக குற்றாலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதற்கான மனு மற்றும் புகார் மனு ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறியுள்ள நீதிமன்ற கட்டணம், சட்ட பிரிவுகளும் சரியானது அல்ல என்றால் சரியல்ல. வழக்குமூலம் அனைத்தும் வழக்கிற்காக கற்பனையாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 ஆவணத்தில் கிரையம் கொடுத்தபிறகு வா.சா.ஆ 4 ஆவணத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் முற்றுபெற்றுவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு மீதமுள்ள சொத்து என்றே கேள்வியே எழாது என்றால் சரியல்ல. வழக்கில் வா.சா.ஆ 1,3 முதல் 5 ஆவணங்கள் அசல் ஆவணங்களாக வழக்கு விசாரணையின் போது தாக்கல் செய்யப்படும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை சான்றாவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். உயில், உயிலின் அடிப்படையில் வழக்கு சொத்து சம்பந்தமான வருவாய் ஆவணங்களில் பதிவு ஏற்பட்டள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல்

செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் உரிமை மற்றும் அனுபவம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 உயிலில் சர்வே எண் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தென்காசி மாவட்ட பதிவாளர் மற்றும் திருநெல்வேலி மண்டல பதிவு துணை தலைவர் ஆகியோர்கள் எனக்கு ஆதரவாக இருந்து விசாரணை செய்யாமல் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.